டொயிஸ் வங்கி
குழுமம்

மட்டம் 21, OGF கோபுரம், 1A மத்திய வீதி, கோல் பேஸ், கொழும்பு 2
தொலைபேசி : +94-11-2447062, தொலைநகல் : +94-11-2447067

நிதி அறிக்கைகள்

2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான அறிக்கைகள்

கூட்டுறவு ஆளுகை

ஜேர்மன் கூட்டுறவு ஆளுகைக் கோவையுடனான இணக்கம்

ஜேர்மன் பங்குகளுடன் தொடர்புடைய நிறுவனச் சட்டம் (AktG) பிரிவு 161 இற்கான பிரகடனம் (இணக்கப் பிரகடனம் 2024)

2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி வழங்கப்பட்ட இணக்கம் தொடர்பான பிரகடனத்தின் திருத்தத்தை மேற்கொள்கையில், டொயிஸ் வங்கியின் முகாமைத்துவ சபை மற்றும் மேற்பார்வைச் சபை 2024 ஒக்டோபர் 28 ஆம் திகதி பின்வரும் இணக்கப் பிரகடனத்தைப் பிரசுரித்துள்ளது.

டொயிஸ் வங்கியின் முகாமைத்துவ சபையும், மேற்பார்வை சபையும் AktG இனுடைய பிரிவு 161 க்கு அமைவாகக் கூடுகிறது.

1. 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி இறுதியான இணக்கப் பிரகடனம் வழங்கப்பட்டது. AktG வங்கிகளுடைய யுமவநைபெளநடடளஉாயகவ ஜேர்மன் கூட்டுறவு ஆளுகைக் கோவை மீதான அரசாங்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடன் 2022 ஏப்ரல் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2022 ஜுன் 27 எனக் குறிப்பிடப்பட்ட சம்'டி அரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், கீழே வழங்கப்பட்டுள்ள விடயம் தவிர, ஏனைய விடயங்களுக்காக எதிர்காலத்தில் தொடர்ச்சியாகப் பின்பற்றப்படும் இந்தத் தவிர்ப்பானது, பரிந்துரை G10 இனுடைய இரண்டாவது வாக்கியத்தைப் பற்றிக் கூறுகிறது. அதன் பிரகாரம், நீண்டகால மாறுபடுகின்ற சம்பளம் தொடர்பான கூறுகள் நான்கு வருட காலப்பகுதியின் பின்னரே முகாமைத்துவ சபை உறுப்பினர்களுக்கு அணுகக்கூடியதாக இருப்பதுடன், 2021 தொடக்கம் 2023 வரையான நிதியாண்டு காலப்பகுதிக்கான முகாமைத்துவ சபை நட்டஈட்டுக்கு மாத்திரமே முழுமையாகத் தொடர்புபடும்.

   முகாமைத்துவ சபைக்கான இழப்பீட்டு முறைமை 2023 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்கே பொருந்தும். எனினும், மறுபடுகின்ற இழப்பீட்டின் நீண்டகால கூறுகள் 5 வருட ஒத்திவைக்கப்பட்ட காலப்பகுதிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த விடயம், பங்கு அடிப்படையிலான சம்பளக்கூறுகளை உள்ளடக்கியதனால், இவை, உத்தரவாதமளிக்கப்பட்ட பின்னர் ஒரு வருட மேலதிக வைத்திருக்கும் காலப்பகுதிக்கு உட்படும். ஒத்திவைக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பான கட்டமைப்பைப் பார்க்கையில், மேற்பார்வை சபை பெப்ரவரி 2022, பெப்ரவரி 2023, ஜனவரி 2024 ஆகிய காலப்பகுதியில் உடனடுத்து வருகின்ற நிதி வருடத்துடன் தொடர்புபடுகின்ற ஒவ்வொரு விடயம் தொடர்பான மாறுபட்ட இழப்பீடு தொடர்பான நீண்டகாலக் கூறுகளை முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மூன்று வருடங்களின் பின்னர் நீண்டகாலக் கூறின் முதல் பகுதிக்கு உரிமையாக்கப்படுவதுடன், இறுதியாக 6 வருடங்கள் கழிந்து அந்தப் பகுதியையும் பரிமாற்றம் செய்ய முடியும். எனவே, மேற்பார்வை சபை, நிறுவனங்களுக்கான ஊதிய கட்டளைச் சட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்கான தேவைப்பாடுகளைப் பின்பற்ற வேண்டும். ஏலவே இருந்த ஊதிய முறைமையில், சூழ்நிலையில் வங்கியுடன் குறிப்பாக தொடர்புபட்ட தேவைப்பாடுகளை நாம் மேலும் கடுமையாக்கக் கருதவில்லை. கடந்த இரண்டு வருடங்களைப் போன்று, 2021, 2022, 2023 ஆகிய காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட நீண்டகாலக் கூறுகளின் முதல் பகுதியை முகாமைத்துவ சபை உறுப்பினரால் உரிமையாக்க முடியாத போதிலும், நாம் இப்பரிந்துரையில் இருந்து ஒரு தவிர்ப்பினை இன்று அறிவிக்கின்றோம். இது, 2025, 2026 மற்றும் 2027 ஆகிய நிதி வருடங்கள் வரை நீடிக்கும்.

   2024 ஜனவரி 01 அல்லது அதற்கு பின்னராக ஆரம்பிக்கப்படும் நிதி வருடங்களுக்கான முகாமைத்து சபை இழப்பீடு தொடர்பான 2024 ஆம் ஆண்டு நிதியாண்டுக்குப் பொருத்தமாக வரும் 'இழப்பீடு' என்ற வாக்கியம் மேலே குறிப்பிடப்பட்ட கோவையிலுள்ள தவிர்ப்பினை விடுவிக்கின்றது.

2. நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக இல்லாத வரை, ஜேர்மன் கூட்டுறவு ஆளுகைக் கோவையின் பரிந்துரைகளின் பொருத்தப்பாட்டினை கடன் நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களுக்குப் பயன்படுகின்ற அளவில் வரையறை செய்கிறது. டொயிஸ் வங்கியின் Aktiengesellschaft இணக்கப் பிரகடனத்தின் தாக்கங்களையும், நியதிச் சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விடயங்களையும் 2023 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் அதன் கூட்டுறவு ஆளுகைக் கூற்றில் அறிக்கையிட்டுள்ளது.

2024 ஒக்டோபரில், பிராங்பேர்ட்

முகாமைத்துவ சபை	முகாமைத்துவ சபை
டொயிஸ் வங்கி Aktiengesellschaft	டொயிஸ் வங்கி Aktiengesellschaft

சட்ட ஏற்பாடுகளின் முன்னுரிமையினால் பொருத்தமற்ற கோவைப் பரிந்துரைகள்

2022 ஏப்ரல் 28 ஆம் திகதி உள்ள கூட்டுறவு ஆளுகைக் கோவையின் பிரிவு F.4 க்கு அமைவாக, விசேட சட்ட ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்ட நிறுவனங்கள் தமது கூட்டுறவு ஆளுகைக் கூற்றில் அதிகாரபூர்வ சட்டக் குறித்துரைகள் காரணமாக, எந்தெந்த பரிந்துரைகள் தமக்குப் பொருந்தவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

டொயிஸ் வங்கி Aktiengesellschaft நிறுவனத்தைப் பொறுத்த வரை, இது தற்போது 2022 ஏப்ரல் 28 இல் உள்ள ஜேர்மன் கூட்டுறவு ஆளுகைக் கோவையின் பிரிவு D.5 இல் உள்ள பரிந்துரைக்குப் பொருந்தும். இது, மேற்பார்வை சபை பங்குதாரர் பிரதிநிதித்துவத்தை மாத்திரம் முழுமையாகக் கொண்ட ஒரு தெரிவுக்குழுவை உருவாக்கும் எனக் குறிப்பிடுகிறது.

மேற்பார்வைக் கடன் நிறுவனம் என்ற வகையில், டொயிஸ் வங்கி, ஜேர்மன் வங்கிச் சட்டத்தின் (KWG) விசேட சட்ட ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டதாகும். டொயிஸ் வங்கியின் மேற்பார்வைச் சபை ஜேர்மன் வங்கிச் சட்டத்தின் (KWG) பிரிவு 25d (11) இன் பிரகாரம், தெரிவுக்குழு ஒன்றை உருவாக்கியுள்ளது. இத்தெரிவுக்குழுவின் முக்கியமான பணிகள் யாதெனில், கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேற்பார்வை சபைக்கு ஆதரவளிப்பதாகும்.

- முகாமைத்துவ சபையின் இடங்களை நிரப்புவதற்காக ஆட்களைக் கண்டறிதலும், மேற்பார்வை சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான முன்மொழிவுகளை தயாரிப்பதும்.
- மேற்பார்வை சபையில் குறைவான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட பாலினத்தை ஊக்குவிப்பதற்காக ஒரு இலக்கினைத் தயார் செய்தல். இதனை அடைவதற்காக,
- முகாமைத்துவ சபை மற்றும் மேற்பார்வை சபையின் கட்டமைப்பு, அளவு, உள்ளடக்கம், செயற்திறன் ஆகியவற்றை வருடத்திற்கு குறைந்தபட்சம் ஒரு முறையாவது, கிரமமாக மதிப்பீடு செய்தலும், இவை தொடர்பாக மேற்பார்வை சபைக்கு பரிந்துரைகளை வழங்குதலும்.
- முகாமைத்துவ சபை மற்றும் மேற்பார்வை சபை தொடர்பான தனிப்பட்ட உறுப்பினர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அனுபவத்தை வருடத்திற்கு ஒரு முறையேனும் குறைந்தபட்சம் கிரமமாக மதிப்பிடுதலும்.
- உயர் முகாமைத்துவ மட்டத்திற்கு உரிய ஆட்களைத் தெரிவு செய்தல் தொடர்பான முகாமைத்துவ சபையின் கொள்கைகளைத் தெரிவு செய்தல் மற்றும் நியமித்தல் தொடர்பான முகாமைத்துவ சபையின் கொள்கைகளை மீளாய்வு செய்தலும், அவை தொடர்பான பரிந்துரைகளை முகாமைத்துவ சபைக்கு வழங்குதலும்.

ஜேர்மன் வங்கிச் சட்டத்தின் (KWG) பிரகாரம், தெரிவுக்குழு நியமிக்கப்படவுள்ளது. எனவே, மேற்பார்வை சபையில் பங்குதாரர் பிரதிநிதிகளுக்கான தேர்தல் முன்மொழிவுகளைத் தயாரிப்பதையும் தாண்டி, மேலும் ஏராளமான பணிகள் உள்ளன. மேற்பார்வை சபையில் உள்ள குழுவொன்றுக்கு பணியாளர் பிரதிநிதிகள் தவிர்க்கப்படுவதுடன், குறிப்பிடத்தக்க காரணம் ஒன்று இருந்தால் மாத்திரமே அதற்கமைய மாத்திரம் அனுமதிக்கப்படுவர். பங்குதாரர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டத்திற்கான முன்மொழிவுகளைத் தயாரிப்பதில் மாத்திரம் ஒரு குழு தனது முழுமையான கடமையாகக் கொண்டிருப்பின், அத்தகைய காரணம் ஒன்று இருக்கும் போது ஜேர்மன் வங்கிச் சட்டத்தினால் (KWG) பணியாளர் பிரதிநிதிகளை விலக்குவதற்கான நியாயமான காரணம் அச் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட தெரிவுக்குழுவுக்கு இல்லை. ஜேர்மன் வங்கிச் சட்டத்தினால் (KWG) தெரிவுக் குழுவுக்கு பல்வேறுபட்ட கட்டாயப் பணிகள் குறித்துரைக்கப்பட்டிருப்பதனாலும், குழுக்களின் உள்ளடக்கத்தில் பணியாட்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவது அனுமதிக்க முடியாததன் காரணமாக ஜேர்மன் கூட்டுறவு ஆளுகைக் கோவையின் பிரிவு D.4 இல் உள்ள பரிந்துரைகள் டொயிஸ் வங்கிக்குப் பொருந்தாது. எனினும், இந்தப் பரிந்துரையைக் கருத்திற்கொள்ளும் முகமாக, தெரிவுக்குழுவின் குறிப்பு விதியின் பிரிவு 2(3) பொதுக் கூட்டத்திற்கான தேர்தல் முன்மொழிவுகள் தெரிவுக் குழுவில் உள்ள பங்குதாரர் பிரதிநிதிகளால் மாத்திரமே தயாரிக்கப்படும் எனக் குறிப்பிடுகிறது.

கூட்டுறவு ஆளுகைக் கூற்றில் தரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களின் 2025 பெப்ரவரி 07 ஆம் திகதியில் உள்ளவாறு ஜேர்மன் வர்த்தகக் கோவையின் பிரிவுகள் 289f மற்றும் 315d க்கு அமைவானது.

முகாமைத்துவ சபை

முகாமைத்துவ சபைக்கான நடபடி முறைகள்

அதனுடைய சட்ட வடிவமைப்பின் பிரகாரம் ஜேர்மன் பங்குக் கூட்டுத்தாபனம் என்ற வகையில், முகாமைத்துவ சபை, மேற்பார்வை சபை மற்றும் பங்குதாரர் கூட்டங்கள் என்பன சபை மற்றும் பங்குதாரர்களின் கூட்டங்கள் டொயிஸ் வங்கி Aktiengesellschaft யின் கூட்டுறவு அமைப்புகளாகும். மேற்பார்வை சபையின் உள்ளடக்கம் தொடர்பான தகவல்கள் 'மேற்பார்வை சபை, தேவைப்பாடுகளின் சுய விபரங்கள், பன்முகத்தன்மைக் கோட்பாடு மற்றும் அந்தஸ்து செயலாக்கம் தொடர்பான இலக்குகள்' என்ற பிரிவில் தரப்பட்டுள்ளது. பங்குதாரர் கூட்டத்தில் மேற்பார்வை சபைக்கான பங்குதாரர் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர். மேற்பார்வை சபை முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதுடன் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்யும்.

முகாமைத்துவ சபை நிறுவனத்தின் நலன்களுக்கென பேண்தகு தன்மையுள்ள பெறுமதியை உருவாக்கும் நோக்கத்துடன் டொயி' முகாமைத்துவ சபையானது சட்டம், கூட்டிணைப்பு விதிகள் மற்றும் முகாமைத்துவச் சபைக்கான குறிப்பு விதிமுறைகள் ஆகியவற்றிற்கு அமைவாக நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாகவுள்ளது. பங்குதாரர்கள், ஊழியர்கள் மற்றும் நிறுவனத்துடன் தொடர்புடைய ஏனைய பங்காளிகளின் நலன்களை அது கவனத்திற் கொள்கின்றது. வங்கியின் வர்த்தக முகாமைத்துவத்திற்காக முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் கூட்டாகப் பொறுப்புக்கூற வேண்டும். இது சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை (ESG) விடயங்களை உள்ளடக்கும். முகாமைத்துவச் சபையானது, குழும முகாமைத்துவச் சபை என்ற முறையில், அனைத்து குழும நிறுவனங்கள் மீது பொது நிருவாகத்தை நடைமுறைப்படுத்தும் ஒரே சீரான வழிகாட்டுதல்களுக்கு அமைய, டொயி' வங்கிக் குழுமத்தை முகாமைத்துவம் செய்கின்றது.

முகாமைத்துவ சபையானது, சட்டம் மற்றும் அதன் கூட்டிணைப்பு விதிகள் ஊடாக குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், சகல விடயங்கள் தொடர்பிலும் தீர்மானங்களை எடுப்பதுடன், சட்ட ரீதியான தேவைப்பாடுகள் மற்றும் உள்ளக வழிகாட்டுதல்கள் (இணக்கப்பாடு) இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. அத்தோடு, அது போதுமான உள்ளக வழிகாட்டு நெறிகள் மேம்படுத்தப்பட்டு அமுலாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. முகாமைத்துவச் சபையின் கடமைகளில் முக்கியமாக, வங்கியின் மூலோபாய முகாமைத்துவமும், வழிகாட்டுதலும், மூலவளங்களின் ஒதுக்கீடு, நிதிக் கணக்கியல் மற்றும் அறிக்கையிடல், கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம், வர்த்தக நிறுவனத்தின் முறையான செயற்பாடு, நிறுவனத்தின் செயற்பாடுகளின் சூழல்சார் மற்றும் சமூகம்சார் அழுத்தங்களை முறையாக இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றே நிறுவனம் சார்ந்த நிருவாகம் என்பனவும் உள்ளடங்குகின்றது. முகாமைத்துவச் சபைக்குக் கீழான மட்டத்திலுள்ள சிரேஷ்ட முகாமைத்துவப் பதவி நியமனங்களை, குறிப்பாக, உலகளாவிய முக்கிய செயற்பாட்டுப் பதவிக்குரியவர்களின் நியமனங்களை, முகாமைத்துவச் சபை தீர்மானிக்கின்றது. குழுமத்தின் முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு ஆட்களை நியமிக்கும்போது, முகாமைத்துவச் சபையானது, பல்வகைத் தன்மையைக் கவனத்திற் கொள்வதுடன், முக்கியமாக, பெண்களுக்குப் பொருத்தமானதொரு பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கும் முயல்கின்றது. (2024 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் □சொந்தப் பணிப்படை□ என்ற அத்தியாயத்தில் நிலையாதாரக் கூற்றின் கீழ் மேலதிகத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன) முகாமைத்துவச் சபை, நிறுவனத்தின் நன்மைக்காகவும், நம்பிக்கையின் அடிப்படையிலான ஒத்துழைப்பு முறையிலும் மேற்பார்வைச் சபையுடன் நெருக்கமாக இணைந்து செயற்படுகின்றது. முகாமைத்துவச் சபை குறிப்பாக, குழுமத்துடன் தொடர்புடைய மூலோபாயம், எதிர்பார்க்கும் வர்த்தகக் கொள்கை. திட்டமிடல், வர்த்தக அபிவிருத்தி, இடர் நிலைமை, இடர் முகாமைத்துவம், ஊழியர் அபிவிருத்தி, நன்மதிப்பு மற்றும் இணக்கப்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து சிக்கல்கள் தொடர்பாக சட்டம் மற்றும் நிருவாக வழிகாட்டல்களினால் விதித்துரைக்கப்பட்டுள்ள விடயப் பரப்பிற்குள் குறைந்தபட்ச அடிப்படையில் மேற்பார்வைச் சபைக்கு அறிக்கையிடுகின்றது.

எமது முகாமைத்துவச் சபையின் கடமைகள், பொறுப்புகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய விரிவான விபரங்கள் அதன் குறிப்பு விதிமுறைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. குறிப்பு விதிமுறைகளின் தற்போதைய பிரதியை எமது வலைத்தளத்தில் பிரவேசித்து (www.db.com/ir/en/documents.htm) பெற்றுக்கொள்ள முடியும்.

நிலையாதாரத் தன்மை

ஐரோப்பிய நிலையாதார அறிக்கையிடல் தரநிலைகளுக்கு (ESRS) அமைவாக, ஐரோப்பிய பாராளுமன்ற மற்றும் மற்றும் பேரவையின் 2013/34/நுரு என இலக்கமிடப்பட்ட 2023 ஜுலை 31 ஆம் திகதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆணைக்குழு பிரதிநிதித்துவ ஒழுங்குமுறை (EU) 2023/2772 இன் படி, கையளிக்கப்பட்ட ஒழுங்குவிதியின் துணைநிலை வழிகாட்டலுக்கு அமைவாக, முக்கியமான தலைப்புகளையும் அடையாளம் காணவும், முக்கியமான தாக்கங்களையும், இடர்களையும், வாய்ப்புகளையும் நிர்வகிப்பதற்கான இரட்டை மதிப்பீட்டுச் செயன்முறையை மீள் பார்வை செய்யும் பொறுப்பை முகாமைத்துவ சபை கொண்டுள்ளது. இரட்டை மதிப்பீட்டின் பெறுபேறுகள் போதுமான அளவில் மேற்பார்வை செய்யப்பட்ட உறுதிப்படுத்த டொயி' வங்கி சிரேஷ்ட முகாமையாளர்களையும் தாபிக்கப்பட்ட ஆளுகை அமைப்புகளையும் உள்ளடக்கிய ஒரு விரிவான கையொப்பமிடும் செயன்முறையைச் செயற்படுத்தியுள்ளது. ஆரம்பத்தில் சிரேஷ்ட சான்றளிக்கும் அதிகாரிகள் தமது அதிகார வரம்புக்குள் முக்கியமான தலைப்புகளின் மதிப்பீட்டுப் பெறுபேறுகளை முறையாகக் கையொப்பமிட்டனர். அதன் பின்னர், வங்கியின் குழும நிலையாதாரக் குழு ஆளுகை மற்றும் தீர்மானம் எடுத்தலில் தலைமைப் பொறுப்பைக் கொண்டுள்ளதனால், முக்கியமான தலைப்புகள் தொடர்பில் இறுதி அங்கீகாரத்தை வழங்கியதுடன், நிலையாதாரம் தொடர்பான விடயங்களிலும் கையொப்பமிடுகின்றது. இறுதியாக, இரட்டை மதிப்பீட்டு முறையின் பேறுபேறுகள் அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். (இது தொடர்பான மேலதிகத் தகவல்களை 2024 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் 'இரட்டை மதிப்பீட்டு முறைமை' என்ற தலைப்பிடப்பட்ட அத்தியாயத்தின் கீழ் உள்ள நிலையாதாரக் கூற்றில் பெற்றுக்கொள்ள முடியும்).

இரட்டை மதிப்பீட்டின் பெறுபேறுகள் மேற்பார்வை சபையின் கணக்காய்வுக் குழுவுக்கும் சமர்ப்பிக்கப்படுவதுடன், முகாமைத்துவ அறிக்கையின் நிலையான கூற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வியாபார ஒதுக்கீட்டுத் திட்டம்

கூட்டுறவு பொறுப்புக் கொள்கை எவ்வாறு இருந்த போதிலும், முகாமைத்துவ சபையின் வர்த்தக ஒதுக்குத் திட்டம் குறிப்பான சில விடயங்களுக்கு தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு பொறுப்புகளை வழங்கியுள்ளதுடன், அவ்வகையில் முழு நிறுவனத்திலுமுள்ள கடமைகளை முகாமைத்துவ சபை வெவ்வேறாக்குவதை உறுதிப்படுத்துகிறது. முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் துணைநிலைக்கட்ட அமைப்புகளுக்கு தமது பொறுப்புகளைக் கையளிக்க முடியும். அவ்வாறு கையளிக்கும் போது, தமது துறை சார்ந்த பணிப் பொறுப்புகளை தெளிவாக ஒதுக்குவதற்கு பொறுப்புடையவர்களாவர். அத்தகைய கையளிப்பு வர்த்தக அமைப்பின் முறையான செயற்பாட்டிற்கு அத்தியாவசியமாகும் என்பதுடன், இக்கையளிப்பு முகாமைத்துவ சபை உறுப்பினர்களை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பினை எவ்வகையிலும் பாதிக்காது. கையளிக்கப்பட்ட பொறுப்புகளுடன் தனிப்பட்ட ஒவ்வொரு நபரும், முகாமைத்துவ சபை தமது கூட்டுப் பொறுப்பை மேற்கொள்வதற்கு உரிய போதுமான தகவல்களை வழங்க வேண்டும்.

முகாமைத்துவ சபைக்கு பயிற்சியளித்தல்

தொழில் ரீதியான பொருத்தப்பாடு தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக திட்டமிட்ட வகையிலான முகாமைத்துவக் குழுவுக்கான பயிற்சி வருடம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இது, சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான பிரச்சினைகளை உள்ளடக்குவதுடன் சட்டம், இணக்கம், நிதிக் குற்றங்களுக்கு எதிரான விடயங்கள், தரவு முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம், மனித வளங்கள் போன்ற ஏனைய விடயங்களையும் உள்ளடக்குகின்றது.

மேற்பார்வை சபை

டொயி' வங்கியின் மேற்பார்வைச் சபை 20 உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. இதில் 10 மேற்பார்வை சபை உறுப்பினர்கள், பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர். 10 பங்குதாரர் பிரதிநிதிகளாகவும் ஜேர்மனியில் உள்ள பணியாட்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 உறுப்பினர்களையும் உள்ளடக்கும். அனைத்து மேற்பார்வை சபை உறுப்பினர்களும் நிறுவனத்தின் அக்கறைகளுக்காகச் செயற்படும் ஒரே மாதிரியான பொறுப்பைக் கொண்டுள்ளதுடன், டொயி' வங்கியின் அக்கறைகளுக்காக மேற்பார்வை சபை பணிகளை நிறைவேற்றுவர். மேற்பார்வை சபை மற்றும் அதன் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கான தேவைப்பாடுகள் அனைத்தும் ஜேர்மன் வங்கிச் சட்டத்தின் (Kreditwesengesetz (KWG) ஒழுங்கு விதிகள் மற்றும் ஜேர்மன் கூட்டுறவு ஆளுகைக் கோவையின் பரிந்துரைகள் (Institutsvergütungs - verordnung (InstitutsVergV)) என்பவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், விசேட மேற்பார்வைத் தேவைப்பாடுகளையும் உள்ளடக்கும். அத்தகைய தேவைப்பாடுகள் ஏனையவற்றுடன் ஜேர்மன் வங்கிச் சட்டம், நிறுவனங்களுக்கான சம்பள கட்டளைச் சட்டம், ஐரோப்பிய வங்கியியல் அதிகார சபையின் (EBA) வழிகாட்டிகள் மற்றும் ஐரோப்பிய பிணையங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அதிகார சபை (ESMA) மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கியின் நிர்வாக நடைமுறைகள் என்பவற்றில் உள்ளன. தனிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள், ஜேர்மன் கூட்டுறவு ஆளுகைக் கோவையின் பரிந்துரைகளில் இருந்து வேறுபடலாம். (சட்ட ஏற்பாடுகளின் முன்னுரிமை காரணமாக பொருத்தமற்ற கோவைப் பரிந்துரைகள் என்ற பிரிவினைப் பார்க்க).

டொய்ஷ் பாங் AG யின் மேற்பார்வை சபையானது, முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களை நியமிக்கின்றது மற்றும் பணிநீக்கம் செய்கின்றது. முகாமைத்துவ சபையினை மேற்பார்வை செய்து, ஆலோசனை வழங்குகின்றது மற்றும் வங்கிக்கான அடிப்படை முக்கியத்துவம் மிக்க தீர்மானங்களில் நேரடியாக ஈடுபடுகிறது. மேற்பார்வை மற்றும் அறிவுரை என்பன குறிப்பாக நிலையாதார விடயங்களை உள்ளடக்குகிறது. ஜேர்மன் வங்கியில் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக மேற்பார்வை சபை முகாமைத்துவ சபையை மேற்பார்வை செய்வதுடன், அச்சபை பொருத்தமான, விவேகமான மேற்பார்வைத் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடக்கின்றதா என்பதையும் கண்காணிக்கிறது. மேற்பார்வை சபை நம்பிக்கை மற்றும் நிறுவனத்தின் நலனுக்காக முகாமைத்துவ சபையுடன் கூட்டுறவின் அடிப்படையில் நெருக்கமாகப் பணிபுரிகிறது. முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் மேற்பார்வை சபைக்கு மாற்றப்படாது.

மேற்பார்வை சபையின் அங்கீகாரம் தேவைப்படும் வர்த்தக நடவடிக்கைகள் டொயி' வங்கியின் அமைப்பு அகவிதியின் பிரிவு 13(1) இல் குறித்துரைக்கப்பட்டுள்ளது. இது, அட்டோனி தத்துவத்தை வழங்குதல், மெய்சொத்துக்களைக் கையேற்றலும் விற்பனை செய்தலும், (அதன் பெறுமதி 500 மில்லியன் € மேலதிகமாக இருப்பின்) கடன் வழங்குதல், ஜேர்மன் வங்கிச் சட்டத்தின் கீழ் தேவைப்படுகின்ற கடன் நிறுவனத்தின் மேற்பார்வை சபைக்கான அங்கீகாரம் தேவைப்படுகின்ற போது அவற்றைக் கையேற்றல் மற்றும் ஏனைய பங்குபற்றுதல்கள் (1 பில்லியன் € பெறுமதிக்கு அதிகமாக இருக்கும் போது) என்பவற்றை உள்ளடக்கும். மேலும், மேற்பார்வை சபை அதன் அங்கீகாரம் தேவைப்படும் மேலதிக நடவடிக்கைகளையும் குறித்துரைக்கலாம். சட்ட மட்டுப்பாடுகளுக்குள் மேற்பார்வை சபை அதிகாரமளிக்கும் தமது பொறுப்பினை வினைத்திறனை அதிகரிப்பதற்கான ஒரு குழுவிடம் கையளிக்கலாம்.

மேற்பார்வை சபை மற்றும் அதன் குழுக்களின் நடைமுறைகள்

சபையின் பணி, நடைமுறைகள், அதன் உறுப்பினர்களின் நிபுணத்துவதினால் மேற்கொள்ளப்படுவதுடன், பணிகளும், ஒருங்கிணைப்புகளும் வினைத்திறனாக பங்கிடப்பட்டுள்ளன.

அதன் உறுப்பினர்கள் மற்றும் வங்கிகளின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக மேற்பார்வை சபை 9 நிலையான குழுக்களை அமைத்துள்ளது. அவையாவன - தலைவரின் குழு, நியமனக் குழு, கணக்காய்வுக் குழு, இடர் குழு, நட்டஈட்டுக் கட்டுப்பாட்டுக் குழு, ஒழுங்குபடுத்தல் மேற்பார்வைக் குழு, மூலோபாயம் மற்றும் நிலையாதாரக் குழு, தொழில்நுட்பம் - தரவுகள் மற்றும் புத்தாக்கக் குழு மற்றும் மத்தியஸ்தக் குழு என்பனவாகும். மேற்பார்வை சபையின் குழுக்களுடைய பொறுப்புகள், பணிகள் மற்றும் நடைமுறைகள், அவற்றின் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

தலைவரின் குழு:

தலைவரின் குழு, குறிப்பாக மேற்பார்வைச் சபைக் கூட்டங்கள், முகாமைத்துவ சபை மற்றும் மேற்பார்வை சபை விடயங்களுக்காக தயார்படுத்துதல், கூட்டுறவு ஆளுகை தொடர்பான முக்கிய தலைப்புகளைக் கையாளுதல் போன்றவற்றைக் கொண்டுள்ளது. மேலும், இக்குழு முகாமைத்துவ சபை உறுப்பினர்களின் நியமனம், பணி நீக்கம் தொடர்பான மேற்பார்வை சபையின் தீர்மானங்களைத் தயார்படுத்த ஆதரவளிக்கின்றது. இவ்விடயம், நியமனக்குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற்கொள்வதோடு, முகாமைத்துவ சபைக்கான நீண்டகால பின்னுறு திட்டத்தையும் உள்ளடக்கும்.

நியமனக் குழு:

நியமனக் குழு, முகாமைத்துவ சபை மற்றும் மேற்பார்வைச் சபைக்கான ஆட்களை இனங்காண, குறிப்பாக உதவுவதுடன், மேற்பார்வை மேற்சபை மற்றும் முகாமைத்துவ சபையின் கட்டமைப்பு, அளவு, உள்ளடக்கம், செயற்திறன் என்பவற்றை மதிப்பிடவும் உதவுகிறது. மேலும், முகாமைத்துவ சபைக்கான பின்னுறு திட்டமிடல் என்பனவற்றுக்கு விசேட அவதானம் வழங்கி, திறன் அபிவிருத்தி, பன்முகத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதுடன், மேற்பார்வை சபையில் குறைந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்ட, பால் நிலையை மேம்படுத்துவதற்கும், அதனை அடைவதற்கான மூலோபாயத்தை வழிவகுக்கவும் ஆதரவளிக்கிறது.

கணக்காய்வுக் குழு:

கணக்காய்வுக் குழு மேற்பார்வை சபைக்கு குறிப்பாக நிதி அறிக்கையிடல் செயன்முறையைக் கண்காணிக்கவும், இடர் முகாமைத்துவ முறைமையை, வினைத்திறனை மேற்பார்வை செய்யவும் (உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் உள்ளகக் கணக்காய்வு) கணக்காய்வாளரின் சுயாதீனத் தன்மை மற்றும் கணக்காய்வாளர்களுக்கு தேவைப்படும் மேலதிகத் தேவைகள் உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்யவும், ஏனைய கணக்காய்வுடன் தொடர்புடைய விடயங்களை மேற்பார்வை செய்யவும் உதவுகிறது. மேலும், உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்களினால் இனங்காணப்பட்ட குறைபாடுகளுக்குப் பொருத்தமான வழிமுறைகள் மூலம் உடனடியான நிவாரணத்தை மேற்கொள்வதற்கான முகாமைத்துவ சபையின் விடயங்களையும் கண்காணிப்பதன் மூலம் மேற்பார்வை சபைக்கு உதவுகிறது.

இடர் குழு:

இடர் குழு தற்போதைய மற்றும் எதிர்கால ஒட்டுமொத்த இடர் தேவைப்பாடு மற்றும் மூலோபாயம் ஆகிய அனைத்து விடயங்களிலும் மேற்பார்வை சபைக்கு அறிவுரை வழங்குவதுடன், சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்படும் இந்த மூலோபாயத்தைக் கண்காணிக்கவும், மேற்பார்வை சபைக்கு உதவுகிறது. இடர்குழு வாடிக்கையாளர்களின் வர்த்தகங்கள், நிலவரங்கள், நிறுவனத்தின் வர்த்தக மற்றும் இடர் கட்டமைப்புடன் ஒருங்கிணைந்து செல்கின்றதா என்பதையும் கண்காணிக்கும். மேலும், இழப்பீட்டு முறைமையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், வங்கியின் இடர், மூலதனம் மற்றும் பணப்புழக்கக் கட்டமைப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டுள்ளதா என்பதை மீளாய்வு செய்வதுடன். தக்கவைத்துக்கொள்ளும் இடரைக் கருத்திற் கொண்டு சம்பாத்தியங்களின் முதிர்வினையும் மீளாய்வு செய்யும்.

நட்டஈட்டுக் கட்டுப்பாட்டுக் குழு:

நட்டஈட்டுக் கட்டுப்பாட்டுக் குழு, நட்டஈடு தொடர்பான விடயங்களைக் கையாளும். இக்குழு, குறிப்பாக, மேற்பார்வைச் சபைக்கு முகாமைத்துவ சபைக்கான நட்டஈட்டு முறைமையை வடிவமைப்பதில் உதவுவதுடன், தொழிலாளர்களுக்கான நட்டஈட்டு முறைமையின் கட்டமைப்பைக் கண்காணிக்கிறது. மேலும், இக்குழு, முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்களுக்கான நட்டஈட்டுடன் தொடர்புடைய மேற்பார்வைக் குழுவின் தீர்மானங்களைத் தயாரிப்பதுடன், நட்டஈட்டு முறைமையின் கீழ் உள்ள வழிமுறைகளில் பயன்பாடு மற்றும் வினைத்திறனைத் தீர்மானிக்கும். இவ்வாறு தீர்மானிக்கையில், சட்ட விதி மீறல்கள், உள்ளக மற்றும் வெளியக விதிகள், கொள்கைகள் என்பவற்றையும் கருத்திற் கொள்ளும்.

ஒழுங்குபடுத்தல் மேற்பார்வைக் குழு:

ஒழுங்குபடுத்தல் மேற்பார்வைக் குழு, மேற்பார்வை சபைக்கு குறிப்பாக, முகாமைத்துவ சபையின் வழிமுறைகள், சட்டத் தேவைப்பாடுகள், அதிகார சபையின் ஒழுங்குவிதிகள் மற்றும் வங்கியின் சொந்தக் கொள்கைகள் என்பவற்றுடன் இணங்கியுள்ளதா என்பதை மேற்பார்வை செய்வதற்கு ஆதரவளிக்கிறது. அத்துடன், உயர்மட்டத்திலான இடருடன் கூடிய நீதிமன்ற வழக்கு நடவடிக்கைளையும் கண்காணிக்கும். மேலும், முகாமைத்துவ சபை ஒழுங்குபடுத்தல் அதிகார சபையுடன் வைத்துள்ள தொடர்பாடலையும், அது எந்தளவு தூரம் வகிக்க பொருத்தமானது என்ற அடிப்படையில் கண்காணிக்கும். (விசேட கணக்காய்வுகள், முக்கியமான முறைப்பாடுகள்).

மூலோபாய மற்றும் நிலையாதாரக் குழு:

மூலோபாய மற்றும் நிலையாதாரக் குழு, மேற்பார்வைச் சபைக்கு சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை மூலோபாயம் மற்றும் நிலையாதார விடயங்கள் உள்ளடங்கலாக, வங்கியின் மூலோபாய விடயங்களைக் கண்காணிக்கும் பணிக்கு உதவுகிறது. வங்கியின் நிலையாதார அபிவிருத்தியுடன் வங்கியின் வர்த்தக மூலோபாயங்கள் ஒன்றிணைந்து செல்கின்றதா என்பது தொடர்பில் முகாமைத்துவ சபைக்கு அறிவுரை வழங்குவதுடன், கண்காணித்தும் வருகின்றது. மேலும், இம்மூலோபாயங்களைத் திட்டமிடும் செயன்முறையைத் தாபித்தல், செயற்படுத்துதல், மதிப்பிடல், சீர்செய்தல் போன்ற விடயங்களிலும் அறிவுரை வழங்குவதுடன் மேற்பார்வை செய்து வருகிறது.

தொழில்நுட்பத் தரவு மற்றும் புத்தாக்கக் குழு:

தொழில்நுட்பத் தரவு மற்றும் புத்தாக்கக் குழு, மேற்பார்வை சபை வங்கியின் தொழில்நுட்பம், தரவு மற்றும் புத்தாக்கச் சூழலுடன் தொடர்புடைய விடயங்களுடனான பொறுப்புகளைப் பூர்த்தி செய்யும் விடயத்தில் மேற்பார்வை செய்கிறது. மேலும், இது, முகாமைத்துவ சபைக்கு போதுமான அளவிலான தொழில்நுட்பம் மற்றும் நிறுவன வளங்கள் மற்றும் வங்கியின் தகவல் தொழில்நுட்ப முறைமைக்குப் போதுமான அளவு திட்டத்திற்கு வரையறை செய்தல் போன்ற விடயங்களில் அறிவுரை வழங்கி, கண்காணித்து வருகிறது. அத்துடன், தகவல் தொழில்நுட்ப மூலோபாயம், தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் மற்றும் இணைய மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர்கள், தரவு மூலோபாயம் மற்றும் ஆளுகை போன்ற விடயங்களையும் கண்காணித்து வருகிறது.

மத்தியஸ்தக் குழு:

மேற்பார்வை சபை, முகாமைத்துவ சபைக்கான உறுப்பினர்களை நியமித்தல் அல்லது அவர்களுடைய கால வரையறையை முடிவுறுத்தல் போன்ற விடயங்களை மூன்றில் இரண்டு பெரும்பான்மை தீர்மானத்தை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் அவ்விடயம் தொடர்பில் மேற்பார்வை சபைக்கு முன்மொழிவுகளை வழங்குகிறது. தேவை ஏற்படும் போது மாத்திரமே மத்தியஸ்தக் குழு கூடும்.

தற்காலிக அடிப்படையில், அனைத்துக் குறிப்பு விதிகளும், மேற்பார்வை சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படும். (உதாரணமாக, சட்டங்கள் அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளில் ஏற்படும் மாற்றம்) இது, வருடத்திற்கு குறைந்தபட்சம் ஒரு முறை நடைபெறும். அவ்வாறு மேற்கொள்ளப்படும் மீளாய்வுகளும், திருத்தங்களும் தற்போது நடைமுறையில் உள்ள பதிப்புகளுக்கு அமைவாக டொயி' வங்கியின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். (www.db.com/ir/en/documents.htm)

ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, மேற்பார்வை சபை, மேற்பார்வை சபையின் உறுப்பினர், தலைவர் மற்றும் குழுக்களின் தலைவர்கள் ஆகியோரின் சுய விபரங்களைச் சமர்ப்பிக்கும். மேலும், ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைய, முகாமைத்துவ அமைப்புகளின் உறுப்பினர்களின் தெரிவு, பின்னுறு திட்டம், மீள் நியமனம் / மீள் தெரிவு மற்றும் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட மற்றும் கூட்டான அடிப்படையில் தகுதிகளை மதிப்பீடு செய்தல் போன்றவை தொடர்பான கொள்கைகளை உள்ளடக்கிய பொருத்தப்பாட்டு வழிகாட்டி ஒன்றையும் வழங்கியுள்ளது. ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைய, இணைப்பு, பயிற்சி மற்றும் பன்முக வழிகாட்டுதல் என்பன பொருத்தப்பாட்டு வழிகாட்டிகளின் கூறுகள் ஆகும். மேலும், மேற்பார்வைச் சபை தேவைப்பாடுகளின் முன்மொழிவினையும் வழங்கியுள்ளது. (மேற்பார்வை சபையின் உள்ளடக்கத்திற்கான இலக்குகள், தேவைப்பாடுகளின் முன்மொழிவுகள், பன்முகத்தன்மைக் கோட்பாடு, செயலாக்கத்தின் நிலைமை / மேற்பார்வை சபையின் தேவைப்பாடுகளின் முன்மொழிவு என்பனவற்றைப் பார்க்க) அத்துடன், மேற்பார்வைக் குழு, அதன் உறுப்பினர்களின் சுயாதீனத் தன்மையை மதிப்பீடு செய்வதற்கும், அக்கறைகளுக்கு அடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கவும் வழிகாட்டிகளைக் கொண்டுள்ளது. இந்த ஆவணங்கள், தற்காலிக அடிப்படையில், ஆயின், குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒருமுறை மீளாய்வு செய்து புதுப்பிக்கப்படும்.

மேற்பார்வை சபைச் சட்டம் மற்றும் நிருவாக வழிகாட்டிகளில் குறித்துரைக்கப்பட்ட எல்லைக்குள் குறிப்பாக, குழுமம் தொடர்பான மூலோபாயம், எண்ணப்பட்ட வர்த்தக் கொள்கை, திட்டமிடல், வர்த்தக அபிவிருத்தி, இடர் நிலைமை, இடர் முகாமைத்துவம், பணியாட்கள் அபிவிருத்தி, நன்மதிப்பு மற்றும் இணக்கம் ஆகிய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் அறிக்கைகளை முகாமைத்துவ சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளும். மேலும், குழுமக் கணக்காய்வுக் குழுவுக்கு ஏதேனும் குறைபாடுகளை இனங்கண்டிருப்பின், அதனை கிரமமாக அறிவிப்பதுடன், மிகவும் மோசமான நிலைமைகளில் தாமதமின்றி அறிவிக்கும். அத்துடன், மேற்பார்வை சபையின் தலைவர், முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் தொடர்பாக இருக்கக்கூடிய முக்கியமான கண்டறிதல்கள் பற்றி அறிவிக்கப்படுவார். ஒழுங்குபடுத்தல் விடயங்களுக்காக மேற்பார்வை சபையும், முகாமைத்துவ சபையும் தகவல்களைக் கொண்ட கட்டமைப்பு ஒன்றை ஏற்றுக் கொண்ள்ளன. அத்துடன், பொதுவான ஈடுபாடு (ஊடாட்டம்) பொதுவான ஈடுபாடு தொடர்பான விதிமுறை மற்றும் இன்னுமொரு விதிமுறையையும் கொண்டுள்ளது. இவை, மேற்பார்வை சபையின் அறிக்கையிடலை மாத்திரம் ஒழுங்குபடுத்தாமல், ஏனைய விடயங்களுடன் மேற்பார்வை சபைக்கு நிறுவனத்தின் பணியாட்கள் தொடர்பான தகவல்களை விசாரிக்கவும், பெற்றுக்கொள்ளவும், கூட்டங்களுக்கான தயார்படுத்தல்கள் தொடர்பான தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளவும் முடியும்.

மேற்பார்வை சபை முகாமைத்துவ சபையின் பங்களிப்பு இன்றி கிரமமாகக் கூடும். இவ்விடயம், அதன் ஏனைய குழுக்களுக்கும் பொருந்தும். அத்துடன், பணியாட்கள் பிரதிநிதிகள் மற்றும் பங்குதாரர் பிரதிநிதிகளும் வெவ்வேறான, கிரமமான அடிப்படையில் ஆரம்பக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்வர்.

மேற்பார்வை சபையின் தலைவர், மேற்பார்வை சபை முறையாகச் செற்படுவதற்கும், தலைமைத்துவப் பங்கைக் கொண்டிருக்கவும் முக்கியமான பங்கை வகிக்கிறார். அவர், மேற்பார்வை சபையின் உள்ளகக் கட்டமைப்பு, தொடர்பாடல் சபைகள், பணிகளின் ஒருங்கிணைப்பு, முகாமைத்துவ சபையுடனான மேற்பார்வை சபையின் ஊடாடல் ஆகிய விடயங்கள் தொடர்பில் உள்ளக வழிகாட்டிகளையும், கொள்கைகளையும் வழங்குவார். மேற்பார்வை சபையின் தலைவர், தேவையான சந்தர்ப்பங்களில் மேற்பார்வை சபையுனுடன் தொடர்புடைய விடயங்களில் முதலீட்டாளர் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதுடன், அந்தக் கலந்துரையாடல்களின் சாராசம்சத்தை கிரமமாக மேற்பார்வை சபைக்கு அறிக்கையிடுவார்.

இவை, சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை விடயங்களையும் உள்ளடக்கும். கூட்டங்களுக்கு இடையில் மேற்பார்வை சபையின் தலைவர் தேவையான அளவு துரிதகதியில் மேற்பார்வை சபையின் குழுக்களுடைய தலைவர்களுடனும், முகாமைத்துவ சபை உறுப்பினர்களுடனும், குறிப்பாக, முகாமைத்துவ சபையின் தலைவருடன் கிரமமாக தொடர்பாடலைப் பேணி வருவார். எனினும், ஏனைய விடயங்களுடன் டொயி' வங்கியின் குழும மூலோபாயம், திட்டமிடல், அதன் வர்த்தக விருத்தி, இடர் நிலைமை, இடர் முகாமைத்துவம், இடர் கட்டுப்பாடு, ஆளுகை, இணக்கம், நட்டஈட்டு முறைகள், தகவல் தொழில்நுட்பம், தகவல் மற்றும் இலத்திரனியல் மயமாக்கம், நிலையாதாரத் தன்மை மற்றும் முக்கியமான நீதிமன்ற வழக்குகள் போன்ற விடயங்களில் கலந்துரையாடுவார். மேற்பார்வை சபையின் தலைவர் தனது பணிப் பொறுப்புக்குள் இருந்து மேற்பார்வை சபை குழுக்களின் தலைவர்களுக்கு தாமதமின்றி டொயி' வங்கி குழுமத்தின் முகாமைத்துவம், அபிவிருத்தி, அதன் நிலைமை போன்றவற்றை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான முக்கியம் வாய்ந்த விடயங்கள் பற்றி முகாமைத்துவ சபைத் தலைவர்களுக்கும் அல்லது முகாமைத்துவ சபையின் ஏனைய உறுப்பினர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். கணக்காய்வுக் குழுவின் தலைவரும் கூட்டங்களுக்கு வெளியே கணக்காய்வாளர்களுடன் கிரமமான கூட்டங்களை நடத்துவார்.

மேலும், மேற்பார்வை சபையின் தலைவரும், மேற்பார்வை சபையின் குழுக்களின் சில தலைவர்களும், ஒழுங்குபடுத்துநர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவர்.

கீழே தரப்பட்டுள்ள சுருக்கமான விடயங்கள் பல்வேறுபட்ட குழுக்களில் உள்ள உறுப்புரிமைகள் பற்றிய மேலதிகத் தகவல்களைத் தருகிறது.

தலைவரின் குழு:

அலெக்சாந்தர் வைனென்ட்ஸ், தலைவர், டிமோ ஹெய்டர், பிராங்க் ஷல்ஸ், பேராசிரியர் கலாநிதி நோர்பர்ட் வின்கெல்ஜோஹான்.

நியமனக் குழு:

அலெக்சாந்தர் வைனென்ட்ஸ், தலைவர், மேரி கிளார்க், டிமோ ஹெய்டர், பிராங்க் ஷல்ஸ், பேராசிரியர் கலாநிதி நோர்பர்ட் வின்கெல்ஜோஹான்.

கணக்காய்வுக் குழு:

பிராங்க் விட்டர், தலைவர், சூசேன் பிளெய்ட், மஞ்சா ஐபர்ட், கிளாடியா பைபர் (2024 ஜனவரி 31 முதல்), பிர்கிட் லாமன் (2024 ஜனவரி 12 வரை), கெர்லின்டே எம். சீபர்ட், கலாநிதி டாக்மர் வால்கார்செல், கலாநிதி தியோடர் வீமர், பேராசிரியர் கலாநிதி நோர்பர்ட் வின்கெல்ஜோஹான்.

இடர் குழு:

மேரி கிளார்க், தலைவர், ஜான் டஸ்செக், கெர்லின்டே எம். சீபர்ட், ஸ்டீபன் சுகால்ஸ்கி, மைக்கேல் ட்ரோக்னி, பேராசிரியர் கலாநிதி நோர்பர்ட் வின்கெல்ஜோஹான், அலெக்சாந்தர் வைனென்ட்ஸ்.

இழப்பீட்டு கட்டுப்பாட்டுக் குழு:

பேராசிரியர் கலாநிதி நோர்பர்ட் வின்கெல்ஜோஹான், தலைவர், ஜான் டஸ்செக், டிமோ ஹெய்டர், ஜுர்கன் டோகல், கலாநிதி டாக்மர் வால்கார்செல், அலெக்சாந்தர் வைனென்ட்ஸ்.

ஒழுங்குபடுத்தல் மேற்பார்வைக் குழு:

கலாநிதி டாக்மர் வால்கார்செல், தலைவர், ஜான் டஸ்செக், சிக்மர் கேப்ரியல், டிமோ ஹெய்டர், ஸ்டீபன் சுகால்ஸ்கி, அலெக்சாந்தர் வைனென்ட்ஸ்.

மூலோபாய மற்றும் நிலையாதாரக் குழு:

ஜான் அலெக்சாண்டர் தைன், தலைவர், மேரி கிளார்க், கிளாடியா பைபர், ப்ளோரியன் ஹாகன்மில்லர் (2024 ஜனவரி 31 முதல்), பிர்கிட் லாமன், (2024 ஜனரி 12 வரை), பிராங்க் ஷல்ஸ், ஜுர்கன் டோகல், மைக்கேல் ட்ரோக்னி, அலெக்சாந்தர் வைனென்ட்ஸ்.

தொழில்நுட்பத் தரவு மற்றும் புத்தாக்கக் குழு:

மைக்கேல் ட்ரோக்னி, தலைவர், சூசேன் பிளெய்ட், மஞ்சா ஐ்.பர்ட், கிளாடியா பைபர் (2024 ஜனவரி 31 வரை), ப்ளோரியன் ஹாகன்மில்லர் (2024 ஜனவரி 31 வரை), யங்வே ஸ்லிங்ஸ்டாட், அலெக்சாந்தர் வைனென்ட்ஸ்.

மத்தியஸ்தக் குழு:

அலெக்சாந்தர் வைனென்ட்ஸ், தலைவர், டிமோ ஹெய்டர், பிராங்க் ஷல்ஸ், பேராசிரியர் கலாநிதி நோர்பர்ட் வின்கெல்ஜோஹான்.

கூட்டுறவு ஆளுகை அறிக்கைக்காக இணைப்பினைப் பார்க்க. (பார்க்க, https://investor-relations.db.com/files/documents/reports/Corporate-Governance-Statement-2024.pdf?language_id=1).

www.skillsads.com